

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 29-03-2025


# குஜராத் போதையை முதலில் ஒழியுங்கள்

2026 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டில் வருமாம், வந்ததும் போதையை ஒழிக்கப் போகிறாராம். இந்திய நாட்டின் இப்போதைய உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்லி இருக்கிறார்.

2026 வரைக்கும் அவர் சும்மா ஏன் இருக்க வேண்டும்? போதை அதிகமாக உள்ள குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்குப் போய் ஒழிக்கலாமே?

இரண்டு நாட்களுக்கு முன் சொல்லப்பட்ட தகவல்தான் இது.

**நாடு முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் துறைமுகங்கள் வழியாக கடத்தப்பட்ட 11 ஆயிரத்து 311 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள்கள் பிடிபட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. அவற்றில் பெரும்பாலானவை குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத் துறைமுகங்களில் சிக்கியவை என்ற தகவல் வந்துள்ளது. இது உள்துறை அமைச்சருக்குத் தெரியாதா? அவர் அங்கே தானே முதலில் போக வேண்டும்.**

“கடந்த ஐந்து ஆண்டுகளில் துறைமுகங்களில் போதைப் பொருள் பறிமுதல் அதிகரித்துள்ளதா” என மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கேள்வி எழுப்பி இருந்தார். துறைமுகங்களில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களின் அளவு மற்றும் அவற்றின் மதிப்பு குறித்தும், துறைமுகங்கள் வழியாக போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேள்வி கேட்டு இருந்தார்.

இதற்கு உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் எழுத்துப் பூர்வமாக பதில் அளித்தார். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

“இந்திய நாடு முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் துறைமுகங்கள் வழியாகக் கடத்தப்பட்ட 11 ஆயிரத்து 311 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள்கள் பிடிபட்டுள்ளன. இதில், குஜராத் மாநிலத்தில் மட்டும் 7 ஆயிரத்து 350 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மகாராஷ்டிராவில் 2 ஆயிரத்து 118 கோடி போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன” என்று சொல்லி இருக்கிறார். இதைச் சொல்பவர், அமித்ஷா துறையின் இணை அமைச்சர் தான். சந்தேகம் இருந்தால் அவரையே போய் கேட்கவும்.

இதன் மூலம், கடந்த 5 ஆண்டுகளில் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள துறைமுகங்கள் வழியாக அதிக அளவில் போதைப்பொருள்கள் கடத்தப்பட்டது அம்பலமாகியுள்ளது. இரண்டுமே பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள். அதுவும் குஜராத் என்பது பிரதமரையும், உள்துறை அமைச்சரையும் தந்த மாநிலம். அங்கே போதை நடமாட்டம் இவ்வளவு இருக்கலாமா? இது யாருக்கு அவமானம்? பிரதமருக்கும் உள்துறை அமைச்சருக்கும் அல்லவா?

நாடு முழுவதும் 5 ஆண்டுகளில் ரூ.11,311 கோடி மதிப்புள்ள போதைப் பொருள்கள் துறைமுகங்களில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றால் அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்? இது யாருடைய நிர்வாகத்தில் விழுந்த ஓட்டை?

‘நாட்டிலேயே அதிகமாக போதைப் பொருள் விற்பனையாகும் மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் தான்’ என்கிறது ஒரு புள்ளிவிவரம். 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் தேதி மாநிலங்களவையில் கொடுக்கப்பட்ட அறிக்கையில் இது இருக்கிறது. இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் ராஜஸ்தானில்தான் அதிகமான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது பா.ஜ.க. ஆளும் மாநிலம் ஆகும்.

★ ராஜஸ்தான்

★ பஞ்சாப்

★ மத்தியப்பிரதேசம்

★ ஜார்கண்ட்

★ மணிப்பூர்

★ குஜராத்

★ அரியானா

★ பீகார்

★ மேற்கு வங்கம்

★ உத்திரப்பிரதேசம் - ஆகிய பத்து மாநிலங்களில்தான் போதைப் பொருள்கள் அதிகமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஏழு மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும்; கூட்டணியில் இருக்கும் மாநிலங்கள். இதைப் பற்றி விவாதம் நடத்தத் தயாரா உள்துறை அமைச்சர்?

**குஜராத் மாநிலம், முழு மதுவிலக்கு மாநிலம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அங்கு மதுவே இல்லையா? 2006-ஆம் ஆண்டு மோடி முதல்வராக இருந்தபோது; முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் ‘Vibrant Gujarat’ என்கிற திட்டத்தின் அடிப்படையில் மதுவிலக்குச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது. வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் குஜராத்தில் மது அருந்தத் தடை எதுவும் இல்லை. குஜராத்தில் சட்டவிரோதமாகப் புழங்கும் மதுவுக்கு எதிராகப் போராடி வரும் மீனா படேல், “குஜராத்தில் சட்ட விரோத மதுவிற்பனை மிகப் பெரிய வணிகமாக உருவெடுத்துள்ளது. பத்து மடங்கு இங்கு விலை அதிகம்” என்று சொல்லி இருக்கிறார். சட்டவிரோத மது அருந்தி உயிரிழப்புகள் நடக்கின்றன. எரிசாராயம் கைப்பற்றப்படுவதும் நடக்கிறது. ‘போன் செய்தால் போதும் மது வீடி தேடி வரும் மாநிலம் குஜராத்’ என்று ஊடகங்கள் எழுதின.**

கடந்த 2023 ஆம் ஆண்டு குஜராத் மாநில அரசு போட்ட சட்டத்தின் படி ‘கிஃப்ட் சிட்டி’ என்ற பகுதியில் மது அருந்துவதற்கு மாநில அரசு அனுமதி அளித்துள்ளது. 2023 தேர்தலின் போது மட்டும் 23 கோடி ரூபாய் மதிப்பிலான மது பாட்டில்கள் குஜராத் மாநிலத்தில் கைப்பற்றப்பட்டன.

**2024ஆம் ஆண்டுக்கான குஜராத் மாநில காவல் துறை அறிக்கைப்படி அம்மாநிலம் முழுவதும் ரூ.144 கோடி மதிப்புள்ள 82 லட்சம் பாட்டில்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்டவையே இந்த அளவு என்றால், தயார் ஆனவை எவ்வளவு இருக்கும்? மதுவிலக்கு நடைமுறையில் உள்ள குஜராத் மாநிலத்தின் நிலைமை இது.**

**பா.ஜ.க. ஆளும் மாநிலத்தில் போதைப் பொருள் நடமாட்டத்தை முதலில் ஒழியுங்கள்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.3.2025) தலைமைச் செயலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2025 –2026 ஆம் ஆண்டிற்கான திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.3.2025) தலைமைச் செயலகத்தில், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள், 2025–2026 ஆம் ஆண்டிற்கான வனத்துறை, கிராமத் தொழில்கள் மற்றும் கதர்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.3.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி கழகம் மற்றும் பட்டு வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.3.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, 2025–2026 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணி நூல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### கூட்டு நடவடிக்கைக்கு வலுச்சேர்த்துள்ளார் தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி !

# சென்னையில் உறுதி பூண்டது; ஐதராபாத்தில் நிறைவேறியுள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, மார்ச் 29-**

**தொகுதி மறுசீரமைப்புத் தொடர்பாக சென்னையில் கூடிய கூட்டு நடவடிக்கைக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டவாறு, அதற்கு வலுசேர்க்கும் வகையில் தெலுங்கானா மாநில அரசும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது குறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பக்கத்தில் குறிப் பிடும்போது, ‘சென்னையில் உறுதி பூண்டது; ஐதராபாத்தில் நிறைவேறியுள்ளது’ என்று குறிப்பிட்டுள்ளார்.**





ஒன்றிய அரசு தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் மக்கள் தொகை அடிப்படை யில் நாடாளுமன்றத் தொகுதிகளை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொண் டுள்ளது.

அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டால், மக்கள் தொகையை கட்டுப்படுத்த திறம்பட செயல்பட்ட மாநிலங்கள் - குறிப் பாக தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் வெகுவாக பாதிப்படைய வாய்ப்பு உள்ளது.

உதாரணமாக தமிழ்நாட்டில் தற்போது 39 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. தொகுதி மறுசீரமைப்பு நடைமுறைப்படுத் தப்படுமேயானால் தமிழ்நாட்டில் மட்டும் 8 தொகுதிகள் குறைய வாய்ப்புள்ளது. அதே போல கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங் கானா உள்ளிட்ட மாநிலங்களும் அதே போல் வட இந்தியாவில் பஞ்சாப் உள்ளிட்ட சில மாநிலங்களும் தொகுதி குறைப்பால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

அதே சமயம் பா.ஜ.க. ஆளும் பெரும் பாலான மாநிலங்கள் - குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை முறையாக கடைபிடிக்காத கார ணத்தால் அதிகரித்து வரும் மக்கள் தொகை காரணமாக கூடுதலான தொகுதிகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

இந்த பாகுபாட்டைக் களைய தொகுதி மறுசீரமைப்பு முறையினை ஒன்றிய அரசு உடனே நடைமுறைப்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தி, இதனால் பாதிக்கப் பட உள்ள கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, பஞ்சாப், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களின் முதல்வர்கள், அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் அடங் கிய கூட்டு நடவடிக்கை குழு ஆலோசனைக் கூட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் கடந்த 22-ஆம் தேதி சென்னையில் கூட்டி விவாதித்து தீர்மானம் நிறைவேற்றினார்.

நியாயமான மறுசீரமைப்பை வலியு றுத்தி, அடுத்த 25 ஆண்டுகளுக்கு இதற் கான நடவடிக்கையை மேற்கொள்ளக்கூ டாது என்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில் தெலுங்கானா முதல மைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் அம்மா நில சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார்.

அதற்குப் பாராட்டு தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது சமூக வலைதளப் பக் கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**சென்னையில் உறுதிபூண்டது, ஐதராபாத் தில் நிறைவேறியுள்ளது.**

**தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், தெலங்கானா மாநி லச் சட்டமன்றத்தில், “நீதி, சமத்துவம் மற்றும் கூட்டாட்சியியல் உணர்வை உயர்த்திப் பிடிக் கும் வகையிலான நியாயமான மறுசீரமைப்பை வலியுறுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மா னத்தை நிறைவேற்றியுள்ளார். தமிழ்நாட்டைத் தொடர்ந்து, தெலங்கானா நிறைவேற்றியுள்ள இத்தீர்மானம் நமது ஜனநாயகத்தின் சமநிலை யைக் குலைக்கும் எந்த முயற்சியையும் தடுத்து நிறுத்தும் நமது கூட்டு நடவடிக் கைக்கு வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது.**

**இது வெறும் தொடக்கம் மட்டுமே! நியா யமான மறுசீரமைப்புக்கான கூட்டு நடவடிக் கைக் குழுவின் இரண்டாவது கூட்டம் ஐதரா பாத்தில் நடைபெறவுள்ள நிலையில், மேலும் பல மாநிலங்கள் நம்மோடு இணைவார்கள். இந்தியாவின் எதிர்காலத்தை நியாயமற்ற முறையில் மாற்றியமைக்க எவரையும் அனு மதிக்க மாட்டோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப் பிட்டுள்ளார்.